**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**முன்னிலை : திருமதி.கு.புவனேஸ்வரி, பி.எல்.,**
**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 31 ஆம் நாள் வியாழக்கிழமை**

**இ.ம.எண்.1/2024 ன் அசல் வழக்கு எண்.184/2021**

1) P. தாமரைக் கண்ணன்

2) V. கலை செல்வி

3) P. சம்பூரணி (இறந்தவர்)

...மனுதாரர்கள்/வாதிகள்

..எதிர்..

1) D. ரமேஷ்

2) ராணி அம்மாள் (விலக்கப்பட்டவர்)

3) P. சம்பூரணி (இறந்தவர்)

... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு 15.07.2025 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. S. நிசார் அஹமத் மற்றும் B. ராஜன் ஆகியோர் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர்/2ம்பிரதிவாதி

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.08.01 20:44:42 +0530

இவ்வழக்கிலிருந்து விலக்கப்பட்டும் மற்றும் 3ம் எதிர்மனுதாரர்/ 3ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையிலும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்ததில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

இம்மனு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 6 விதி 17ன் கீழ் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்:–

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் ஆவர். 26.01.2024 அன்று மூன்றாம் வாதி சம்பூரணி இறந்துவிட்டார். அவரது இறப்பை பதிவு செய்வதற்காக அசல் வழக்கில் வழக்குரையை திருத்தக் கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். அவரது சட்டப்பூர்வ வாரிசுகளான முதல் மற்றும் இரண்டாம் வாதிகள் ஏற்கனவே பதிவில் இருப்பதால், கூடுதல் சட்டப்பூர்வ பிரதிநிதிகளை வழக்கில் சேர்க்க வேண்டியதில்லை.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.08.01 20:44:53 +0530

சீர்படுத்த முடியாத இழப்பைத் தவிர்ப்பதற்கு இந்த திருத்தம் அவசியமானது. மேலும், இதனால் பிரதிவாதிகளுக்கு எந்தப் பாதகமும் ஏற்படாது. எனவே அசல் வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களைச் செய்வதற்கு உத்தரவிட வேண்டும்.

**3. 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:-**

இம்மனு சட்டத்தின்படியோ அல்லது உண்மைகளின்படியோ நிலைநிறுத்தப்படத்தக்கதல்ல. மூன்றாம் வாதி 26.01.2024 அன்று இறந்த போதிலும், திருத்த மனு ஆகஸ்ட் மாதம் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, இது வழக்கு நடவடிக்கைகளைத் தாமதப்படுத்தும் நோக்கம் கொண்டதாக விளங்குகிறது. இறந்த மூன்றாம் வாதியின் சட்டப்பூர்வ வாரிசுகளாக மனுதாரர்களை உறுதிப்படுத்த எந்த சட்டப்பூர்வ வாரிசு சான்றிதழும் வழங்கப்படவில்லை. இம்மனு காலதாமதமானது, உண்மைகளுக்கு முரணானது. எனவே, இந்த மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4. தீர்வு செய்யப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்:-**

இந்த மனு மனுதாரர்களால் கோரப்படும் பரிகாரம் அனுமதிக்கக் கூடியதா? என்பதாகும்.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.08.01 20:45:04 +0530

**5.** இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**பிரச்சனை:–**

**6.** இருதரப்பும் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் ஆவர். மனுதாரர்கள்/ வாதிகள் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கானது விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருகிறது. இவ்வழக்கில் 26.01.2024 அன்று இறந்த மூன்றாம் வாதி சம்பூரணியின் இறப்பை பதிவு செய்வதற்காக அசல் வழக்கில் வழக்குரையை திருத்தங்களைச் செய்ய அனுமதிக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் மூன்றாம் வாதி 26.01.2024 அன்று இறந்த போதிலும், திருத்த மனு ஆகஸ்ட் மாதம் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் இறந்த மூன்றாம் வாதியின் சட்டப்பூர்வ வாரிசுகளாக மனுதாரர்களை உறுதிப்படுத்த எந்த சட்டப்பூர்வ வாரிசு சான்றிதழும் வழங்கப்படவில்லை என்றும் ஆட்சபணை தெரிவித்துள்ள போதிலும் இறந்த 3ம் வாதியின் வாரிசுகள் ஏற்கனவே அசல் வழக்கில் 1ம் மற்றும் 2ம் வாதிகளாக உள்ள நிலையில்

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.08.01 20:45:11 +0530

மனு சங்கதிகளை பரிசீலிக்கும் போது அசல் வழக்கில் முழுமையான தீர்வு காணும் பொருட்டும், நீதியின் நலன் கருதியும் இம்மனுவை அனுமதிப்பது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவில், இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினிமயமாக்கப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 31 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.08.01 20:45:16 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>– இல்லை**

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.08.01 20:45:20 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**வரைவு/தெளிவு உத்தரவு**
**இ.ம.எண்.1/2024 ன்**
**அசல் வழக்கு எண்.184/2021**
**நாள் 31.07.2025**
**2 வது கூ.மா.அ.நீ., பூந்தமல்லி.**